# කාර්ය සාධන වාර්තාව 2017
# செயல் நிறைவேற்ற அறிக்கை 2017
# Performance Report 2017

**තැපැල්, තැපැල් සේවා හා මුස්ලිම් ආගමික කටයුතු අමාත්‍යාංශය**

**அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சு**

**Ministry of Posts, Postal Services and Muslim Religious Affairs**

# செயல் நிறைவேற்ற அறிக்கை 2017

## அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சு


**அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சு**
**6 மற்றும் 7 ஆம் மாடி,**
**அஞ்சல்தலைமையகக் கட்டிடம்**
**இல. 310, டீ.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

## உள்ளடக்கும்

பக்க இல.


| | |
|---|---|
| ❖ அறிமுகம் | 1 - 3 |
| ❖ தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகள் | 4 - 9 |
| ❖ அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகள் | 10 - 19 |
| ❖ விசேட தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் | 20 - 22 |
| ❖ உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் | 23 |
| ❖ நிதி நடவடிக்கைகள் | 24 |

- ❖ இணைப்பு 01 - அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு
- ❖ இணைப்பு 02 - அமைச்சின் பதவியணி விபரம்
- ❖ அமைச்சின் செயற்பாடுகள் - புகைப்படங்கள்

# அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சு

## அறிமுகம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1933/13 ஆம் இலக்க 2015.09.21ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு தாபிக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த அமைச்சின் கீழ் கொள்ளப்படுகின்ற நிறுவனங்கள் பின்வவருமாறாகும்.

- தபால் திணைக்களம்
- முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்

தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் நோக்கு, செயற்பணி, அமுல்படுத்த வேண்டிய சட்டங்கள், நோக்கங்கள் மற்றும் பணிகள் பின்வருமாறாகும்.

## நோக்கு

மிகச்சிறந்த, வினைத்திறன்மிக்க தபால் சேவை மற்றும் இஸ்லாமிய சமய மற்றும் கலாசார அலுவல்களை மேம்படுத்தல்.

## செயற்பணி

நம்பகமானதும், உயர் தரம்மிக்கதுமான தபால் சேவையை தாங்கிக்கொள்ளக்கூடிய விலையில் பொது மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதும், இலங்கை வாழ் முஸ்லிம் சமுதாயத்தின் சமய மற்றும் கலாசார அலுவல்களை மேம்படுத்துவதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதும்.

## நடைமுறைப்படுத்த வேண்டிய சட்டங்கள்

1. முத்திரைகள் கட்டளைச் சட்டம் (1909 இன் 22 ஆம் இலக்கம்)
2. அஞ்சல் அலுவலக கட்டளைச் சட்டம் (1908 இன் 11 ஆம் இலக்கம்)
3. முஸ்லிம் பள்ளிவாயல்கள், மற்றும் முஸ்லிம் அறக்கட்டளைகள் அல்லது வக்புகள் சட்டம் (1956 இன் 51 ஆம் இலக்கம்)

**நோக்கங்கள்:**

1. தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் விடயங்கள் சம்பந்தமான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயார் செய்தல்.

2. செலவினத்தைக் குறைத்து பொது மக்களுக்கு மிகவும் இலாபகரமானதும், வினைத்திறன்மிக்கதும், நட்புறவானதுமான தபால் சேவையை வழங்குதல்.

3. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பூகோள போக்குகளுடன் ஒத்திசைந்த வகையில் தபால் சேவையினை நவீனமயப்படுத்தி விஸ்தரித்தல்.

4. தபால் சேவையின் தரம், நியமங்கள் மற்றும் மேம்படுத்தலை உறுதிசெய்தல்.

5. உள்நாட்டுத் தபால் தொடர்பாடல் சேவைக்குச் சமாந்தரமாக நிதிச் சேவை வசதிகளை கிராமிய மட்டம் வரை விஸ்தரித்தல்.

6. முகவராண்மை சேவைகளை ஆற்றும் பரப்பெல்லையை விஸ்தரித்து தபால் அலுவலகங்களை மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு சேவைகளையும் ஆற்றுகின்ற அலகொன்றாக வலுவூட்டல்.

7. அங்கீகரிக்கப்பட்ட முத்திரைக் கொள்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல்.

8. நினைவு முத்திரைகள் மற்றும் அது சம்பந்தமான ஆகக்கங்களை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் தனித்துவத்தையும், பெருமையையும் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்லல்.

9. சர்வதேச தபால் சங்கத்தின் அங்கத்துவ நாடு என்ற வகையில் அதன் ஒழுங்குறுத்தல்களுக்கு அமைய இலங்கையின் தபால் சேவையை சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்றவாறு சர்வதேச தபால் சேவையை மேம்படுத்தல்.

10. முஸ்லிம் பள்ளிவாசல்கள், இஸ்லாமிய சமய நிறுவனங்கள், அறக்கட்டளை நிதியங்கள் என்பவற்றின் சொத்துக்களை நிருவகித்தல்.

11. இஸ்லாமிய மார்க்கக் கல்வி, இஸ்லாமிய கலாசார அம்சங்களை போசிப்பதும், மேம்படுத்துவதும்.

12. முஸ்லிமான ஒவ்வொருவரும் ஒரு முறையேனும் ஹஜ் கடமையினை நிறைவேற்றச் செல்வதற்காக மிகவும் நியாயமான முறையியல் ஒன்றை ஏற்படுத்துவதற்கான அரச தலையீட்டை உறுதி செய்தல்.

13. மீளாதுன் நபி வைபவத்தை நோக்காகக் கொண்டு முஸ்லிம் சமய, கலாசார மற்றும் சமுதாய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

14. ரமழான் நோன்பினை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுத்தல்.

**பணிகள்**

1. தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம் சம்பந்தமான அரச கொள்கைகளைத் தயார் செய்வதும், அமுல்படுத்துவதும்.

2. அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களையும் வழிநடாத்துவதும், கண்காணிப்புச் செய்வதும்.

3. தபால்துறை மற்றும் முஸ்லிம் சமய நடவடிக்கைகள் தொடர்பாக உரிய கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4. தபால் துறை மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் தொடர்பான சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிவருவதும், அத்தொடர்புகளை மேம்படுத்துவதும்.

5. தகவல் தொழில்நுட்பச் துறையின் அபிவிருத்திக்கு இசைவாக திணைக்களத்தின் முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை அமுல்படுத்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

6. சர்வதேச தரநியமங்களுக்கு அமைவாக தபால் சேவைகளைப் பேணிவருவதும், வழிநடாத்துவதும்.

7. அதிவேக தபால் மற்றும் பொதிச் சேவைகள் மற்றும் சகல நிதிசார் சேவைகளையும் தபால் அலுவலகக் கட்டமைப்பின் ஊடாக விஸ்தரிப்பதை வழிநடாத்துவதும், கண்காணிப்புச் செய்வதும்.

8. அரச மற்றும் தனியார் துறையின் பங்கேற்பின் ஊடாக வினைத்திறனும், உற்பத்தித்திறனும், தரமும்மிக்க தபால் சேவையைப் பொது மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

9. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொண்டு, நிதிப் பரிமாற்றல் சேவைகளை மேம்படுத்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

10. சர்வதேச தபால் சங்கத்தின் மற்றும் ஆசிய பசுபிக் தபால் சங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான அரச ஒருங்கிணைப்பாளர் என்ற வகையில் தபால் திணைக்களத்தை வழிநடாத்துவதும், கண்காணிப்புச் செய்வதும்.

11. தபால் மற்றும் உப தபால் அலுவலக கட்டமைப்பின் ஊடாக காசுப் பரிமாற்றம், காப்புறுதிச் சேவைகள் மற்றும் வங்கி மற்றும் ஏனைய நிதிச் சேவைகளை ஆரம்பிப்பதும், தற்போது காணப்படுகின்ற முகவராண்மைச் சேவைகளை மேம்படுத்துவதை கண்காணிப்புச் செய்வதும்.

12. முத்திரைக் கொள்கைக்கு இசைவாக உள்நாட்டுத் தேவைகளுக்குப் பொருத்தமானவாறு தபால் முத்திரை மற்றும் வருமான முத்திரைகளை வடிவமைத்தல், அச்சிடல், வெளியிடல், சந்தைப்படுத்தல் மற்றும் இருப்புக் கட்டுப்பாட்டை நல்ல முறையில் பேணிவருவதைக் கண்காணிப்புச் செய்தல்.

13. நினைவு முத்திரைகள் மற்றும் அது தொடர்பான ஆக்கங்களை அவற்றின் தரத்தைப் பாதுகாக்கும் வகையில் வடிவமைத்தல், அச்சிடல், வெளியிடல் மற்றும் சந்தைப்படுத்துவதை வழிநடாத்துவதும், கண்காணிப்புச் செய்வதும்.

14. வக்பு சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதும், வக்பு சபையின் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்வதும்.

15. முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் மீலாதுன் நபி வைபவத்திற்கென திரண்ட நிதியிலிருந்து ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள நிதியை முஸ்லிம் சமய நிறுவனங்களுக்கு ஒதுக்கிக் கொடுத்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

16. புனித ரமழான் மாதத்தில் முஸ்லிம் நாடுகளில் இருந்து அன்பளிப்பாக எமது நாட்டுக்கு கிடைக்கும் பேரீத்தம் பழங்களை சகல முஸ்லிம் குடும்பங்களையும் உள்ளடக்கும் வகையில் மாவட்ட மட்டத்தில் விநியோகித்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

17. ஹஜ் யாத்திரை தொடர்பாக சவுதி அரசாங்கத்துடன் தேவையான சகல நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்புச் செய்தல், ஹஜ் யாத்திரையை ஒழுங்கு செய்யும் அமைப்புக்களை தெரிவு செய்தல், ஹஜ் பங்கினை (ஞரழவய) முறையாக பகிர்ந்தளித்தல், வழிநடாத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

**தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் 2017.01.01 முதல் 2017.12.31 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.**

## 1. தாபன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்

இப்பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பிரதான பொழிப்புரையான செயற்பணி பின்வருமாறு.

1. அமைச்சின் பதவியணியினர் மற்றும் அதன் கீழுள்ள தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் சேவையாற்றும் ஊழியர்களின் தாபன நடவடிக்கைகளை நிறைவேற்றல்.
2. அமைச்சின் நிருவாக நடவடிக்கைகளை வழிநடாத்தல்
3. அமைச்சின் ஊடக நடவடிக்கைகளை நிறைவேற்றல்
4. பாராளுமன்றத்தின் தேவைப்பாடுகள் சம்பந்தமான நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி பற்றிய தகவல்கள் இணைப்பு 1 மற்றும் 11 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1.1 2017.01.01 திகதி முதல் 2017.12.31 வரையான காலப்பகுதிக்குள் அமைச்சின் தாபனப் பிரிவின் நடவடிக்கைகள் பற்றிய முன்னேற்றம்

#### 1.1.1 பதவியணியின் தாபன நடவடிக்கைகள்

| பதவிப் பெயர் /சேவை | புதிய பதவிகளை ஏற்படுத்த விண்ணப்பம் சமர்ப்பித்தல் | பதவிகளை ஏற்படுத்துவதற்கான அங்கீகாரம் | புதிய நியமனம் பெற்று வருகைதரல் | இடமாற்றம் | ஓய்வுறுத்தல் | சேவையை நிறைவு செய்தல் | ஆட்சேர்ப்பு | இடமாற்றம் பெற்று வந்தவை | ஏனையன (பதவி விலகல்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு** | | | | | | | | | |
| கௌரவ பிரதி அமைச்சரின் பதவியணியினர் | - | - | - | - | - | 22 | - | - | |
| செயலாளர் | - | - | - | 01 | - | - | - | 01 | |
| பிரதம கணக்காளர் | - | - | - | - | 01 | - | - | 01 | |
| பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | - | - | - | - | 01 | - | - | 01 | |
| சிரே'ட உதவிச் செயலாளர் | - | - | - | 01 | - | - | - | - | |
| மொழிபெயர்ப்பாளர் | - | - | - | - | - | - | - | - | - |
| அபிவிருத்தி அலுவலர் /இணைந்த அலுவலர் | - | - | - | 02 | - | - | - | 01 | - |
| அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | - | - | 04 | 02 | - | - | - | 04 | 01 |
| சாரதி சேவை | - | - | - | 04 | 01 | 01 | - | 03 | - |
| அலுவலக சிற்றூழியர் சேவை | - | - | - | 02 | - | - | - | 02 | - |
| கெமரா இயக்குநர் உதவியாளர் (தற்.) | - | - | 01 | - | - | - | - | - | - |
| தோட்டத் தொழிலாளி (ஒப்பந்த) | - | - | 01 | - | - | 01 | - | - | - |
| **தபால் திணைக்களம்** | | | | | | | | | |
| இணைந்த தபால் சேவை | - | - | - | - | 19 | - | - | - | - |
| இலங்கை பொறியியலாளர் சேவை | - | - | - | - | - | - | - | - | - |
| இலங்கை கணக்காளர் சேவை | - | - | - | 05 | - | - | - | - | - |
| அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | - | - | - | - | 07 | - | - | - | - |
| **முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்** | | | | | | | | | |
| - | - | - | - | - | - | - | - | - | - |

தபால் திணைக்களத்தின்,

1. அரச முகாமைத்துவ உதவியாளர்களான அலுலவர்களை இரண்டாம் நிலை அடிப்படையில் சேவையிலிருந்து விடுவித்தல் - 01
2. சாதாரண வினைத்திறனின்மை மற்றும் ஓய்வூய்திய யாப்பின் 12 ஆம் பிரிவின் கீழ் ஓய்வுறுத்தல் - 09
3. அபிவிருத்தி உதவியாளர்களை இரண்டாம் நிலை அடிப்படையில் சேவையிலிருந்து விடுவித்தல் - 01

தொழில் சங்க நடவடிக்கைகளுக்காக அலுவலர்களை விடுவித்தல் - 07

## 1.1.2 இணைந்த தபால் சேவை அலுவலர்களின் நியமனங்களும் பதவி உயர்வுகளும் மற்றும் மேன்முறையீடுகளும்

I. இணைந்த தபால் சேவையின் அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள் சேவைக்கு அமர்த்துவதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைக் கோரும் ஏழு (07) கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. முன்னைய ஆண்டுக்குரிய ஒன்றுடன் (01) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் எட்டு (08) அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

II. கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்சாரா / தொழில்நுட்பம் சார்ந்த அலுவலர் வகுதியின் தபால் சேவை அலுவலர் பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2010.09.19 ஆம் திகதி நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 144 வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2017.02.14 ஆம் திகதி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

III. கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்சாரா / தொழில்நுட்பம் சார்ந்த அலுவலர் வகுதியின் தபால் சேவை அலுவலர் பதவிக்கு 2015.11.28 ஆம் திகதி நடாத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 94 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

IV. நிறைவேற்று சேவை வகுதி ஐஐஐ தபால் அத்தியட்சகர் பதவியில் 2016.03.31 ஆம் திகதி வரை ஏற்பட்ட 20 வெற்றிடங்களை சேவைமுதுமை மற்றும் திறமையின் அடிப்படையில் நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சையை நடாத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

V. நிறைவேற்று சேவை வகுதி ஐஐஐ தபால் அத்தியட்சகர் பதவியில் 2016.03.31 ஆம் திகதி வரை ஏற்பட்ட 03 வெற்றிடங்களை எழுத்துமூலமான போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நிரப்புவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

VI. முகாமைத்துவ உதவியாளர் விசேடதரத்தைச் சேர்ந்த உதவித் தபால் அத்தியட்சகர் (தலைமை தபால் அலுவலகங்கள்) பதவிக்கு சேவை அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு, ஆட்சேர்ப்பு நடைமுறைகளை திருத்தியமைப்பதற்கு மற்றும் தபால் திணைக்களத்தின் ஏனைய அனைத்து ஆட்சேர்ப்பு நடைமுறைகளை திருத்தியமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

VII. முகாமைத்துவ உதவியாளர் விசேடதரத்தைச் சேர்ந்த உதவித் தபால் அத்தியட்சகர் (தலைமை தபால் அலுவலகங்கள்) பதவிக்கு சேவை அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சையை நடாத்துவதற்கு, அதற்கான புள்ளிவழங்கும் நடைமுறை, விண்ணப்பம் கோரும் அறிவித்தலுக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

VIII. 2017.04.30 ஆம் திகதி வரை உதவித் தபால் அத்தியட்சகர் (புலனாய்வு) பதவியில் ஏற்பட்ட 24 வெற்றிடங்கள், உதவித் தபால் அத்தியட்சகர் (கணக்குப் பரிசோதகர்) பதவியில் ஏற்பட்ட 28 வெற்றிடங்களை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையை நடாத்துவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

## 1.2. நிறுவனங்களினால் கோரப்பட்டுள்ள அறிக்கைகள் பற்றிய விபரங்கள்

### 1.2.1 அவ்வவ் நிறுவனங்களினால் கோரப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு பதில் அறிக்கைகளை சமர்ப்பிப்பதும் அறிக்கைகளுக்கான கோரிக்கைகளை விடுப்பதும்

| அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனங்கள் / மேன்முறையீடு | சனாதிபதி செயலகம் | பிரதமர் அலுவலகம் | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | பொது மனுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | ஓம்புட்ஸ்மனிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | பொது நிர்வாக அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | தபால் மாஅதிபரிடம் கோரப்பட்ட அறிக்கைகள் | | | மேன்முறையீட்டாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள பதில்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | மேன்முறையீட்டாளர்களிடம் கிடைத்த கடிதங்களின் எண்ணிக்கை | கோரப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | கிடைத்த அறிக்கைகளின் எண்ணிக்கை | |
| 1. உபதபால் நிலைய பொறுப்பதிகாரி சேவை | - | - | 12 | - | - | - | - | 22 | 22 | 14 | 07 |
| 2. தபால் திணைக்களத்தின் கனி'ட சேவையில் உள்ள பல்வேறு சிக்கல்கள் தொடர்பாக | - | - | 18 | - | - | - | - | 28 | 28 | 20 | - |
| 3. இணைந்த தபால் சேவையில் தற்போது ஓய்வு பெற்றுள்ள அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் | 03 | 05 | 56 | 76 | - | 02 | - | 08 | 165 | 80 | 20 |
| 4. மேன்மை தங்கிய சனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் கௌரவ அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகள் தொடர்பாக | - | - | 12 | - | - | - | - | - | 78 | - | 56 |
| 5. இணைந்த தபால் சேவையில் ஈடுபட்டிருந்தபோது ஒழுக்காற்று உத்தரவு பெற்றுள்ள மற்றும் வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள அலுவலர்கள் | - | - | 05 | - | - | - | - | - | 11 | - | 04 |
| 6. தொழிற்சங்க நடவடிக்கைகள் | - | - | - | - | - | - | - | 33 | 33 | - | - |
| 7.இலஞ்ச ஊழல்கள் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவினால் வினவுதல் | - | - | - | - | - | - | - | - | 02 | - | - |
| **மொத்தம்** | **03** | **05** | **103** | **76** | **-** | **02** | **-** | **91** | **339** | **114** | **87** |

**1.2.2 இதற்கு மேலதிகமாக பின்வருமாறு அறிக்கைகளை சமர்ப்பித்தல் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பிப்பதும் இடம்பெற்றுள்ளது.**

I. பதிலளிக்கப்பட்ட பாராளுமன்ற வினாக்களின் எண்ணிக்கை - 01

II. உள்ளக நிருவாகம் மற்றும் அரசாங்க முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினர் அனுப்பப்பட்ட கடிதங்கள் தொடர்பில் அறிக்கைகளைக் கோரல் - 09

III. அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை - 37

(தீர்மானங்கள் கிடைத்துள்ள விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை - 34)

**1.2.3 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்அறியும் சட்டத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளல்.**

i. கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை - 31

ii. பூர்த்தி செய்த கோரிக்கைகளின் எண்ணிக்கை - 27

iii. நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை - 03

iv. நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றவை - 01

**1.2.4 தொழில் சங்க கலந்துரையாடல்களை நடாத்தல் - 11**

**1.3 தபால் திணைக்கள அலுவலர்களின்,**

I. திடீர் விபத்துக்களுக்கான லீவுகளை அங்கீகரித்தல் - 32

II. விசேட லீவு அங்கீகரித்தல் - 27

III. பொதுநிர்வாக சுற்றறிக்கை 22.∵93 இன் கீழ் நட்டஈடு செலுத்தல் - 05

**1.4 முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்கள அலுவலர்களின்,**

1. பதவியணியினருக்கு மேலதிக நேரம் மற்றும் பிரயாணக் கொடுப்பனவுகளை அங்கீகரித்தல்
   - கலாசார உதவியாளர் மற்றும் நிதி உதவியாளர் - 01
   - அபிவிருத்தி அலுவலர் - 06
   - முகாமைத்துவ உதவியாளர் - 04
   - அலுவலக சிற்றூழியர் - 10
   - சாரதி - 10

11. அரசாங்க சேவைகள் சேமலாப நிதியத்தின் பதிவைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் - 26

111. அரசாங்க சேவைகள் சேமலாப நிதியத்தின் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் - 14

**1.5 மேலதிக நேரம், பிரயாணச் செலவினம், சேவைகள் மற்றும் வசதிகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை**

| பணி | செலவு தலைப்பு | உறுதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **சேவைகள் மற்றும் வசதிகள்** | | |
| **வாகனங்கள்** | | |
| பராமரிப்பு | 1301 | 164 |
| எரிபொருள் விநியோகம் | 1202 | 266 |
| காப்புறுதி நடவடிக்கைகள் | | 17 |
| **சேவைகள்** | | |
| நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்கள் | 1403 | 08 |
| துப்பரவேற்பாடு | 1405 | 12 |
| பாதுகாப்பு | | 12 |
| உபசரணை | 1203 | 17 |
| உபகரணம் பராமரிப்பு | 1302 | 36 |
| தொலைபேசி பட்டியல்களைத் தீர்த்தல் | | 671 |
| பத்திரிகை பட்டியல்களைத் தீர்த்தல் | | 223 |
| குடிநீர் போத்தல் வழங்கல் | | 12 |
| வாடகை செலுத்தல் மற்றும் ஏனையன (கௌரவ அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் அலுவலகம்) | 1404 | 44 |
| **மேலதிக நேரம் /பிரயாணச் செலவினம் மற்றும் வேறு கொடுப்பனவுகள்** | | |
| மேலதிக நேரம் | 1002 | 486 |

**1.6 வெளிநாட்டு லீவுகளை அங்கீகரித்தல்**

| லீவு | அமைச்சு | தபால் திணைக்களம் | முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் |
|---|---|---|---|
| தனிப்பட்ட | - | 230 | 08 |
| தொழில் | - | 08 | - |

**1.7 பயிலுனர்களுக்கு செயன்முறைப் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல்**

| அமைச்சு | தபால் திணைக்களம் | முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் |
|---|---|---|
| 02 | 32 | 01 |

**1.8 தகவல் ஊடகத்துறை அலகின் செயற்பணிகள்**

1.8.1 தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு, தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்த ஆண்டில் நிறைவேற்றியுள்ள சேவைகள், அபிவிருத்திகள் மற்றும் நலன்புரிப் பணிகள் தொடர்பாக ஊடக அலகு அவற்றுக்கான பிரச்சாரப் பணிகளுக்கு பங்களிப்பு வழங்கியுள்ளது.

1.8.2 வெளி ஊடக நிறுவனங்களுடன் மிகநெருக்கமான தொடர்பைப் பேணிவருவதுடன் 100 ஊடக அறிக்கைகள், 08 ஊடகவியலாளர் மாநாடுகள், 600 புகைப்படங்கள் மற்றும் செய்திகள் உள்ளடங்கிய 128 சீடி மற்றும் வீடியோ கெசட்கள் பிரச்சாரப் பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ளன.

## 1.9 ஏனைய தாபன நடவடிக்கைகள்

**1.9.1** ை. புகையிரத அனுமதிச் சீட்டுக்களை வழங்குதல் - 57
பட்டியல்களைத் தீர்த்தல் - 12
ைை. அக்ரகார காப்புறுதி நட்டயீட்டுக்கான விண்ணப்பித்தல் - 51

**1.9.2** கடன் வழங்குதல்

- இடர் கடன் - 44
- ஆதனக் கடன் - 03

**1.9.3** சலுகை மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்கல்

ை. தபால் திணைக்கள அலுவலர்களுக்கு - 02
ைை. ஓய்வுபெற்ற அலுவலர்களுக்க - 03

**1.9.4** மொழிக் கொடுப்பனவு செலுத்தல் - 02

**1.9.5** பாராளுமன்றத்துக்கு செலுத்தப்பட்ட பட்டியல்களின் எண்ணிக்கை - 11

**1.9.6** மொழிபெயர்ப்புக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை - 27

**1.9.7** கௌரவ அமைச்சர் மற்றும் கௌரவ பிரதி அமைச்சருக்கு எரிபொருள் விநியோகம், புகைப் பரிசோதனை செய்தல், சாரதி அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல், மேலதிக எரிபொருள் பெற்றுக் கொள்ளல், சில்லறை காசு முற்பணம் மற்றும் வேறு பணிகளுக்கான உறுதிச்சீட்டுக்களின் எண்ணிக்கை - 129

**1.9.8** வாகன விபத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல் - 09

**1.9.9** ஊடக அலகின் பிரயாணச் செலவினங்கள் மற்றும் மேலதிகநேர விண்ணப்பஙக்ளை தீர்த்தல் - 52

**1.9.10** பதவி நிலை அலுவலர்களின் பிரயாணச் செலவின கோரிக்கைகளைத் தீர்த்தல் - 07

**1.9.11** பதவிநிலை அல்லாத அலுவலர்கள் மற்றும் அலுவலக சிற்றூழியர்களின் மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினங்களைத் தீர்த்தல் - 54

**1.9.12** பதவி நிலை அலுவலர்களின் 1/20 கொடுப்பனவைச் செலுத்தல் - 32

**1.9.13** உத்தியோகபூர்க அடையாள அட்டைகளை வெளியிடல் - 18

**1.9.14** கௌரவ அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரின் பதவியணியினருக்கான பிரயாணச் செலவினம் மற்றும் மேலதிக நேரக் கோரிக்கைகளைத் தீர்த்தல் - 221

**1.9.15** இலவச புகையிரத ஆணைச்சீட்டுக்களைத் தயார் செய்து புகையிரத திணைக்களத்திற்கு அனுப்பல் - 12

**1.9.16** தபால் திணைக்களத்தின் வெளி தொழிலாளரிகளின் கடமை நாட்களை சான்றுப்படுத்தல் - 12

## 02. அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகள்

### 2.1 முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகள் மற்றும் வருடாந்த செயலாற்றுகை நடவடிக்கைகள்

- தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் மற்றும் தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சம்பந்தமாக அரசாங்க நிதிச் சுற்றறிக்கை 01.∴2014 இற்கு அமைய 2017 ஆம் ஆண்டுக்கான செயல் ரீதியான திட்டம் தயார் செய்யப்பட்டு நிதி அமைச்சு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் மற்றும் உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- 2016 ஆம் ஆண்டில் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் அனைத்துப் பிரிவுகள் சம்பந்தமான தகவல்களைப் பெற்றுக்கொண்டு செயலாற்றுகை அறிக்கை தயார் செய்யப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் நிதி அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

- 2016 ஆம் ஆண்டுக்காக தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினூடாக தயார் செய்யப்பட்ட மேற்படி திணைக்களங்களின் செயலாற்றுகை அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக முன்வைக்கப்பட்டதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது.

- நாடு முழுவதிலும் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் தொடர்பான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்வது காலாண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு, தபால் திணைக்களம், முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் தொடர்பான நடவடிக்கைக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு பிரேரணைகளும், தீர்மானங்களும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

- **2017.12.31 ஆந் திகதிக்கு மூலதன நிதியைப் பயன்படுத்தி அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்.**

  - **நிதிசார் முன்னேற்றம்.**

| நிறுவனம் | 2017 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபா மில்லியன் | 2017.12.31ஆந் திகதிக்கான செலவினம் ரூபா மில்லியன் | % |
|---|---|---|---|
| தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு | 176.17 | 160.19 | 90.9 |
| தபால் திணைக்களம் | 522.00 | 505.22 | 96.8 |
| முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் | 37.20 | 33.62 | 90.4 |
| மொத்தம் | **735.37** | **699.03** | **95.1** |

- பௌதீக முன்னேற்றம் - தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு

| கருத்திட்டத்தின் பெயர் | 2017 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபா மில்லியன் | 2017.12.31 ஆந் திகதிக்கான செலவினம் ரூபா மில்லியன் | முன்னேற்றம் |
|---|---|---|---|
| முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கான கட்டிடத்தை நிர்மாணித்தல் | 43.00 | 31.55 | முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கான கட்டிடத்தை நிர்மாணிப்பது 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டமாகும். இதன் போது நிர்மாணிப்புப் பணிகள் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் கண்காணிப்பின் கீழ் மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.மி. 596.0 ஆகும். 2015 ஆம் ஆண்டின் இறுதியில் 01 மற்றும் 02 ஆம் கட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டில் இதன் 03 ஆம் கட்டம் வரையான பணிகள் நிறைவு செய்யப்பட்டன. 2017ஆம் ஆண்டில் நிறைவு செய்துள்ள வேலைகளுடன் இந்தக் கட்டிடத்தில் இதுவரை 04 மாடிகளின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| தபால் அலுவலகங்களுக்கு 250 கணினிகள், தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவதற்கான இயந்திரங்கள் (ரூீளு) 250 மற்றும் அச்சு இயந்திரங்கள் 250 ஐ கொள்வனவு செய்யதல் | 21.56 | 21.56 | இந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட தபால் அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. |
| தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை புதுப்பித்தல் | 1.69 | 1.50 | கொழும்பு 07 இல் அமைந்துள்ள அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை புதுப்பிக்கும் பணிகள் கட்டிடத் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன. |
| முத்திரைகளை மேம்படுத்தல் | 1.00 | 1.00 | தபால் திணைக்களத்தின் முத்திரை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. |
| யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தபால் அலுவலகத்தை வலையமைப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் | 10.00 | 7.79 | உப தபால் அலுவலகங்கள் 25 வலையமைப்புச் செய்யப்பட்டதுடன், தபால் கொண்டுசெல்வதற்காக 10 மோட்டார் சைக்கில்கள் மற்றும் 02 முச்சக்கர வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டன. |
| தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சருக்கு ஒரு வாகனத்தைக் கொள்வனவு செய்தல் | 43.00 | 41.40 | வாகனம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. |
| தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சருக்கு ஒரு வாகனத்தைக் கொள்வனவு செய்தல் | 42.65 | 42.65 | வாகனம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. |

➢ **பௌதீக முன்னேற்றம் -** தபால் திணைக்களம்

| கருத்திட்டத்தின் பெயர் | 2017 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபா மில்லியன் | 2017 ஆம் ஆண்டுக்கான செலவினம் ரூபா மில்லியன் | முன்னேற்றம் |
|---|---|---|---|
| தபால் அலுவலக கட்டிடங்களை புதுப்பித்தல் | 112.87 | 101.54 | தபால் அலுவலக கட்டிடங்களை புதுப்பிப்பதன் கீழ் தபால் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி. 80.00 ஆகும். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தபால் அலுவலகங்களை புனரமைப்பதற்காக கிடைத்த தொகை ரூ.மி. 32.87 ஆகும். இந்தத் தொகையில் நாடு முழுவதிலும் அமைந்துள்ள தபால் அலுவலகங்களை புதுப்பிக்கும் பணிகளாக 207 வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. |
| தபால் போக்குவரத்துக்காக வாகனங்களை கொள்வனவு செய்தல் | 322.00 | 317.70 | இதன் கீழ் தபால் திணைக்களத்திற்கு பின்வருமாறு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.<br>- தபால்காரர்களுக்கு 8175 சைக்கில்கள் ரூ.மி. 103.32<br>- தபால் போக்குவரத்துக்கு 21 வேன் வண்டிகள் ரூ.மி. 195.70<br>- தபால் போக்குவரத்துக்கு 04 லொரி வண்டிகள் ரூ.மி. 18.68 |
| முத்திரை மேம்படுத்தல் | 7.00 | 6.98 | முத்திரைகளை மேம்படுத்துவதன் கீழ் தபால் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி. 6.00 ஆகும். மேலும் அமைச்சினால் இதற்கு ரூ.மி. 1.00 வழங்கப்பட்டது. கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் முத்திரைக் கருமபீடமொன்றை ஆரம்பிப்பதற்காக சிவில் விமான சேவைகள் அதிகார சபையுடன் கலந்துரையாடிய பின்னர் இதன் நிர்மாணப் பணிகள் 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ளன. மேலும் இணையத்தளம் ஊடாக முத்திரைக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கான மொடியுலை அறிமுகம் செய்தமை, தனிப்பட்ட வகையிலான முத்திரைகளை மேம்படுத்தல், மல்ரி மீடியா புரொஜெக்டர் ஒன்றைக் கொள்வனவு செய்தல் மற்றும் பொது மக்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் முத்திரைப் பணியகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முத்திரைக் கண்காட்சியொன்றை நடாத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |

➢ **பௌதீக முன்னேற்றம் -** முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்

| கருத்திட்டத்தின் பெயர் | 2017 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபா மில்லியன் | 2017 ஆம் ஆண்டுக்கான செலவினம் ரூபா மில்லியன் | முன்னேற்றம் |
|---|---|---|---|
| தேசிய மீளாதுன் நபி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 14.00 | 13.44 | இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் சமய வழிபாட்டுத்தலங்கள் 34 புதுப்பிக்கப்பட்டன. |
| முஸ்லிம் சமய மற்றும் கலாசார நிலையங்களை மேம்படுத்தல் | 20.00 | 17.35 | இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாடு முழுவதிலும் அமைந்துள்ள முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் சமய வழிபாட்டுத்தலங்கள் 110 புதுப்பிக்கப்பட்டன. |

- சனாதிபதி செயலகம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், அரசாங்க தகவல்கள் திணைக்களம், மாவட்ட செயலகங்களினால் வினவப்படுகின்ற தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பற்றிய முன்னேற்றத்தை அறிக்கையிடுவதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- காணிகளை சுவீகரிக்கும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தபால் சேவை நடவடிக்கைகளுக்காக தபால் அலுவலகங்கள் மற்றும் உப தபால் அலுவலகங்களுக்கு காணிகளை சுவீகரித்தல் மற்றும பொறுப்பேற்றுக் கொள்ளல் தொடர்பான (சுமார் 325 கோப்புக்கள்) பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தபால் மற்றும் முஸ்லிம் சமய நடவடிக்கைகளின் சேவைகளை முறையாகவும், ஒழுங்காகவும் பெற்றுக் கொடுப்பதற்காக கட்டிடங்களை நிர்மாணிப்பது தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் கீழ் இஸ்லாம் சமய மற்றும் கலாசார நிலைய புதிய கட்டிடத்திற்கு உட்கட்டமைப்பு வவசதிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் கௌரவ தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை புதுப்பிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- தபால் திணைக்களத்தினால் தற்போது ஒப்பந்தம் செய்துகொண்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தனியார் துறையுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு சேவைகள் சம்பந்தமாக சட்ட மாஅதிபரின் அறிவுரைக்கு அமைய முறையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி ஒப்பந்தங்கள் தொடர்பாக தபால் மாஅதிபரின் ஆலோசனைகளும், அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

- அச்சு ஊடகங்களினூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் மற்றும் பிரேரணைகளைக் கவனத்தில் கொண்டு குறித்த சிக்கல்களைத் தீர்த்துவைத்து தபால் சேவைகளை மேம்படுத்தவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சனாதிபதி செயலகத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற ''சனாதிபதியிடம் கூறுங்கள்'' நிகழ்ச்சித்திட்டம் மூலமும், பிரதம அமைச்சர் அலுவலகம், ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து கிடைக்கின்ற கோரிக்கைகள், பிரேரணைகள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தபால் மாஅதிபருக்கு உரிய ஆலோசனைகள் வழங்குவதும், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு அறிவிப்பதும்.

- உலக தபால் தினம் 2017 ஐ முன்னிட்டு வருடாந்தம் நடாத்தப்படுகின்ற சர்வதேச கடிதம் எழுதும் போட்டி, தேசிய மற்றும் மாகாண மட்டத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளுக்கான சித்திரம், கட்டுரைப் போட்டியை நடாத்தத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- யாழ்ப்பாணம், வரல்ல, நிட்டம்புவ மற்றும் மொரட்டுவை ஆகிய இடங்களில் புதிதாக 04 முகவர் தபால் நிலையங்களைத் தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தும் நடவடிக்கைகளை தபால் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் உதவியுடன் மேற்கொள்ளல்.

- தபால் சேவைகளின் அபிவிருத்தி சம்பந்தமான புதிய கருத்திட்டங்கள், பிரேரணைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.

- தபால் அலுவலக பிணை நிதியக் கட்டளைச் சட்டம் சம்பந்தமான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.

## 2. 2. முத்திரை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்

- முத்திரைக் கொள்கையை இற்றைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- வருடாந்த முத்திரை நிகழ்ச்சித்திட்டத்திற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல்.
- வருடாந்த முத்திரை நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்காத முத்திரைகளுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.
- முத்திரைசார் பெறுமதியைப் பாதுகாக்கின்றவாறு தரமான முத்திரைகளை அச்சிடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செயற்படல்.
- முத்திரை சித்திர மாதிரிகளுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தல்.

**2017 இன் வருடாந்த முத்திரை நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்கிய அங்கீகாரம் வழங்கப்பட்ட முத்திரை சித்திர மாதிரிகளின் எண்ணிக்கை பின்வருமாறாகும்.**

| | **தலைப்பு** | **வெளியிடப்பட்ட முத்திரைகளின் எண்ணிக்கை** | **நினைவு ஆவணங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 01. | வருடாந்தம் வெளியிடுபவை<br>1.1 வெசாக் வைபவம்<br>1.2 நத்தார் வைபவம்<br>1.3 தேசிய மீலாதுன் நபி வைபவம் | 07 | 01 |
| 02. | உலக தபால் தினம் | 02 | - |
| 03. | சிறுவர் செயற்பாடுகள் | 01 | - |
| 04. | பிரபலமான ஆட்கள் | 01 | - |
| 05. | தேசிய நிகழ்வுகள்<br>5.1 முத்திரைப் பணியகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் இலங்கையின் முதலாவது முத்திரைக்கு 160 வருடங்கள் பூர்த்தியடைதல்<br>5.2 இலங்கை சாரணியர் அமைப்பின் நூற்றாண்டு விழா<br>5.3 இலங்கை தேயிலை கைத்தொழிலின் 150 ஆவது ஆண்டு நிறைவு | 08 | 03 |
| 06. | சர்வதேச நிகழ்வுகள்<br>இலங்கை – கொரிய இராஜதந்திர உறவுகள் | 01 | - |
| 07. | இலங்கையின் பெருமை<br>இலங்கைக்கு தனித்துவமிக்க பறவைகள் | 04 | - |
| | **மொத்தம்** | **24** | **04** |

**2017 இன் வருடாந்த முத்திரை நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்காத அங்கீகாரம் வழங்கப்பட்ட முத்திரைகளின் எண்ணிக்கை பின்வருமாறாகும்.**

| | **தலைப்பு** | **வெளியிடப்பட்ட முத்திரைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | ஐக்கிய நாடுகளின் சர்வதேச வெசாக் தின வைபவம் | 20 |
| 02 | தேசிய வீரர்கள் | 02 |
| 03 | ஆட்களை அடிப்படையாகக் கொண்ட நிரந்தர வகுதியின் முத்திரைகள் | 03 |
| 04 | வேறு | 10 |
| | **மொத்தம்** | **35** |

## 2. 3. மனித வள அபிவிருத்தி

➢ **உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்**

| | **பயிற்சி பெற்ற அலுவலர் வகுதி** | **பயிற்சி பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை** | **பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 01 | பதவி நிலை அலுவலர்கள் | 13 | 14 |
| 02 | அபிவிருத்தி அலுவலர்கள் | 22 | 25 |
| 03 | முகாமைத்துவ உதவியாளர் | 18 | 17 |
| 04 | சாரதி | 08 | 05 |
| 05 | அலுவலக சிற்றூழியர் | 12 | 06 |
| | **மொத்தம்** | **73** | **67** |
| 06 | சகல பதவியணியினரும் | 90 | 02 |

- இதற்கு மேலதிகமாக தகவல் அறியும் சட்டம் தொடர்பாக மற்றும் ஶ்ரீஜ இனங்காணல் தொடர்பாக 02 செயலமர்வுகள் தபால் அமைச்சு, தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சகல பதவிநிலை அலுவலர்களுக்காகவும் ஒழுங்குசெய்யப்பட்டது.

➢ **வெளிநாட்டு மாநாடுகள் ∴ பயிற்சி நடவடிக்கைகளில் பங்கேற்றல்**

**தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு**

| **அலுவலர் வகுதி** | **பங்கேற்ற அலுவலர்களின் எண்ணிக்கை** | **சுற்றுலா மேற்கொண்ட நாடு** | **விடயம்** |
|---|---|---|---|
| பதவி நிலை அலுவலர்கள் | 01 | Iran | Attending APPU Meeting |
| | 01 | Malaysia | Second Country visit – Capacity Building Program |
| **மொத்தம்** | 02 | | |

➢ **தபால் திணைக்களம்**

| அலுவலர் வகுதி | பங்கேற்ற அலுவலர்களின் எண்ணிக்கை | சுற்றுலா மேற்கொண்ட நாடு | விடயம் |
|---|---|---|---|
| பதவி நிலை அலுவலர்கள் | 01 | Thailand | Terminal Dues Workshop for the Asia Pacific Postal Colleague. |
| | 01 | Thailand | Business Planning Workshop for the Asia Pacific Region |
| | 01 | Thailand | Asia Pacific Postal Union Meeting – 2017 |
| | 01 | China | 2017 Seminar on China's Experience in Reform & Operating –up for Developing Countries. |
| | 02 | Switzerland | Council of Administration (CA) session |
| | 04 | Iran | 12th APPU Congress |
| | 03 | Thailand | Operational Readiness for E-Commerce workshop for the Asia – Pacific Region |
| | 01 | Korea | EMS Symposium of positioning EMS for growth for Senior management of the Asia Pacific Region |
| | 01 | Thailand | Postal Mangement Course (PMC) at Asia Pacific Postal College |
| | 02 | Thailand | PIM International Management Programme in Thailand |
| | 01 | Malaysia | ÜNI APPRO POST & Logistics Determined and Prepared "Conference |
| | 01 | Russia | "UPO World CEO" |
| | 01 | Thailand | EMS Pay – for – Performance Workshop - 2017 |
| | 01 | Switzerland | UPU course design training workshop |
| | 01 | Thailand | " Last Mile Asean – Conference & Expo 2017" |
| | 02 | Switzerland | Council of Administration(CA) and Postal Operations Council (POC) |
| | 01 | Malaysia | Development Administration Modernization and Transformation Programme |
| | 02 | Thailand | 6th APPU Postal Business Forum |
| **மொத்தம்** | **27** | | |
| தபால் சேவை அலுவலர்கள் மற்றும் ஏனைய அலுவலர்கள் | 01 | India | Mail Management Programme. |
| | 01 | Thailand | International Mail Accounting Course. |
| | 03 | India | Advance Postal Management Programme & Quality Management in Postal Services. |
| | 01 | Pakistan | International Course on Management Techniques |
| | 02 | Thailand | Operation Management Course |
| | 02 | Thailand | Human Resource Management Course |
| | 01 | Australia | WCO-UPU Custom Post Workshop for the Asia – Pacific Region |
| | 01 | Thailand | Digital Financial Services & Financial Inclusion Workshop |
| | 01 | Thailand | "UPU-IPS/IPS.POST Workshop" |
| | 01 | Thailand | Marketing and Innovation for Posts (MIP) at Asia Pacific Postal College |
| | 01 | Thailand | Express Mail Service (EMS) at Asia Pacific Postal College |
| | 01 | Thailand | EMS Operational and Performance Improvement Workshop |
| **மொத்தம்** | **16** | | |

➢ **முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்**

| அலுவலர் வகுதி | பங்கேற்ற அலுவலர்களின் எண்ணிக்கை | சுற்றுலா மேற்கொண்ட நாடு | விடயம் |
|---|---|---|---|
| பதவி நிலை அலுவலர்கள் | 02 | Malaysia | Hajj Workshop on Best Practices |
| | 01 | Saudi Arabia | Hajj Committee Delegation |
| | 02 | Saudi Arabia | Visit to the Kingdom of Saudi Arabia for Hajj Duty |
| | 01 | Malaysia | Malaysian Technical Cooperation Programme (MTCP) 2017 |
| ஏனைய அலுவலர்கள் | 04 | Saudi Arabia | Visit to the Kingdom of Saudi Arabia for Hajj Duty |
| **மொத்தம்** | **10** | | |

## 2.4 நூலக வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்

அமைச்சின் பதவியணியினரது தரமான மனப்பாங்குசார் மேம்பாட்டை நோக்காக் கொண்ட பல்வேறு விடயங்கள் சம்பந்தமான சுமார் 1372 புத்தகங்களைக் கொண்ட நூலகமொன்று நடாத்திச் செல்லப்படுவதுடன், வாரத்தில் இரண்டு நாட்கள் குறிப்பாக சுமார் இரண்டு மணிநேரத்திற்குள் அங்கத்தவர்களுக்கு புத்தகங்களை வெளியே கொண்டுசெல்வதற்கு வசதி செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.5 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளல்

### 2.5.1 எரிசக்திப் பாதுகாப்பு முறையியல்களை அமுல்படுத்தல்

அரசாங்க நிறுவனங்களில் சிக்கனமாக மின்சாரத்தைப் பயன்படுத்துவதைப் பழக்கப்படுத்தல் மற்றும் அதன் மூலம் எரிசக்தியை சேமிப்பதற்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ள எரிசக்தியை பாதுகாக்கும் முறையியல்களை அமுல்படுத்துவதானது 2015 ஆண்டு டிசம்பர் மாதம் முதல் அமைச்சின் சகல பிரிவுகளையும் மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இதற்காக நியமனம் செய்யப்பட்ட எரிசக்தி முகாமையாளர் ஒருவரின் கீழ் குறித்த பாதுகாப்பு முறையியல்கள் அமுல்படுத்தப்பட்டு மின்சாரப் பயன்பாட்டை 10மூ இனால் குறைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் மாதாந்தம் அதன் முன்னேற்றத்தை அவதானிப்புச் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் நிலைபேறான சக்தி அதிகார சபையினால் பத்தரமுல்லை வோடர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் ஒழுங்கு செய்யப்பட்ட எரிசக்தி முகாமையாளர்களை அறிவுறுத்தும் மாநாட்டில் கலந்துகொண்டு எரிசக்திப் பாதுகாப்பு முறையியல் பற்றிய அறிவும் வளர்த்துக் கொள்ளப்பட்டது. 2017 நவம்பர் மாதம் எரிசக்திப் பயன்பாடு பற்றிய சனாதிபதி செயலணியினால் ஒழுங்குசெய்யப்பட்ட மேலதிக பயிற்சிச் செயலமர்வில் கலந்துகொண்டதுடன், நிறுவனங்களில் சிக்கமாக எரிசக்திப் பயன்பாடு பற்றிய செயன்முறை மற்றும் கோட்பாடுசார் அறிவும் வளர்த்துக் கொள்ளப்பட்டது.

எரிசக்திப் பாதுகாப்பு முறையியல்கள் மற்றும் பசுமை உற்பத்தித்திறன் எண்ணக்கருவைப் பயன்படுத்திக் கொண்டு 2017 யூலை முதல் 2017 நவம்பர் மாதம் வரை அமுல்படுத்தப்பட்ட 04 மாதங்களில் அமைச்சினுள் எரிசக்திப் பாதுகாப்புக் கருத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டது. 2017 இன் இறுதி மாதங்களில் சுமார் 10மூ இனால் எரிசக்தியை சேமித்துக் கொள்வதற்கும், அதன் மூலம் தேசிய நிதியை சேமித்துக் கொள்ளும் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கும் முடியுமாயிற்று.

### 2.5.2 பசுமை உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டம்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதை மையமாகக் கொண்டு தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட பசுமை உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்று மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தை அமைச்சிலும் அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டது. இதன் போது சுற்றாடல் விடயங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பசுமை உற்பத்தித்திறன் எண்ணக்கருவின் கீழ் அமைச்சின் எரிசக்திப் பாதுகாப்பு, நீர்ப்பாதுகாப்பு ஆகிய விடயங்களை மையமாகக் கொண்டு கருத்திட்ட அறிக்கையொன்றும், உற்பத்தித்திறன் செயலகத்திற்கு அனுப்பப்பட்டதுடன், மேற்படி கருத்திட்டத்தை அமைச்சில் ஆரம்பிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நான்கு (04) மாத காலமாக அமுல்படுத்தப்பட்ட இந்தக் கருத்திட்டத்தின் மூலம் எரிசக்தியை சேமித்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், இது வெற்றியளித்தது. இது பற்றித் தயார் செய்யப்பட்ட (ீழறநச ீழைவெ ீசநளநவெயவழைெ) சமர்ப்பணம் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் போது அதன் அலுவலர்கள் முன் சமர்ப்பிக்கப்பட்டது.

### 2.5.3 நிலைபேறான இலங்கை தேசிய கண்காட்சி

சனாதிபதி செயலகத்தினால் 2017 மார்ச் மாதம் 31 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட திரசர லங்கா தேசிய விழா எனும் தேசியக் கண்காட்சிக்கு எமது அமைச்சும் பங்களிப்பை வழங்கியது. இதன் போது அமைச்சு, தபால் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து சமாதானத்தை தொணிப்பொருளாகக் கொண்டு சமயரீதியான சகவாழ்வை வெளிப்படுத்துகின்ற முத்திரை சம்பந்தமான கண்காட்சிக் கூடங்கள் மூன்றை ஒழுங்குசெய்திருந்தன. இங்கு கண்காட்சிக் கூடங்களில் அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தியமை தொடர்பில் பாராட்டைப் பெற்றதுடன், இதன் போது நான்காவது இடத்தை வென்றெடுக்கவும் முடிந்தது.

### 2.5.4 யாழ் மாவட்ட தபால் அலுவலக வலையமைப்பை மேம்படுத்தல்

இதன் கீழ் யாழ் மாவட்டத்தின் உப தபால் அலுவலகங்கள் 25 வலையமைப்புச் செய்யப்பட்டதுடன், தபால் போக்குவரத்துக்கென 10 மோட்டார் சைக்கில்களும், 02 முச்சக்கர வண்டிகளும் கொள்வனவு செய்யப்பட்டன. இதன் மூலம் தபால் அலுவலகங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதனால் பொது மக்களுக்கு மென்மேலும் வினைத்திறன்மிக்கவாறு தமது அன்றாட தபால் சேவைகள், இலத்திரனியல் காசுக் கட்டளை, பட்டியல்களைச் செலுத்தல் போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்வது இலகுபடுத்தப்பட்டுள்ளது.

### 2.5.5 தபால் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற சிறிய மற்றும் நடுத்தர மட்டத்திலான தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் கருத்திட்டம்

2017 ஆம் ஆண்டினை வறுமையை ஒழிக்கும் ஆண்டாக பிரகடனம் செய்யும் அரசாங்கத்தின் கொள்கைக்கு தபாலின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதை உறுதி செய்வதற்காக சிறிய மற்றும் நடுத்தர மட்டத்திலான தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு தபால் திணைக்களத்தின் ஊடாக அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டமாகும். திணைக்களத்தின் வடிவமைக்கப்படுகின்ற தகுந்த இணையத்தள அடிப்படையைப் பயன்படுத்தி மென்பொருள் முறைமையொன்றைப் பேணிவருவதன் மூலம் நுண், சிறிய மற்றும் நடுத்தர மட்டத்திலான தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு புதிய விற்பனை முறையியலை அறிமுகம் செய்வது இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 2.6 டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்

டெங்கு நோயை ஒழிப்பதற்காக நுளம்புகள் பரவும் இடங்களை இனங்காண்பதற்கும், அவ்விடங்களை சுத்தம் செய்வதற்கும், இது பற்றி சுகாதார அமைச்சுக்கு மாதாந்தம் அறிக்கையிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் சனாதிபதி செயலணியினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மும்மாத டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக இந்த அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்புச் செயன்முறை பற்றி சனாதிபதி செயலகத்திற்கு அறிக்கையிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 2.7 வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

அமைச்சினுள் உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள், உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அலுவலகத்தில் அமுல்படுத்த செயற்பட்டமை.

சனாதிபதி செயலகத்தின் 2010.05.31 ஆம் திகதிய எஸ்பி.∵.எஸ்பி.∵.03.∵.10 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கு அமைய அமைச்சில் ஈ-அரச கொள்கையை அமுல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் கீழ் அமைச்சினுள் இணையத்தள வசதிகளைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

அரச முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/09 மற்றும் ஆம் 2009.06.12திகதிய மற்றும் யேுசுஊ.∵.ஆசுஊ.∵.09.∵.01ஆம் இலக்க 2009.09.25 ஆம் திகதிய சுற்றறிக்கைகளின் அறிவுரைகளுக்கு அமைய பொது நிருவாக மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 03. விசேட தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய நடவடிக்கைகள்

2017 ஆம் ஆண்டில் 2017.01.01 முதல் 2017.12.31 வரையான காலப்பகுதிக்குள் பின்வரும் பணிகள் இப்பிரிவின் கண்காணிப்பின் கீழ் அமுல்படுத்தப்பட்டன.

### ➢ தபால் நடவடிக்கைகள்

- முத்திரைக் கொள்கைக்கு அமைய முத்திரைப் பணியகத்தின் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பில் அவசியமான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- முத்திரை திட்டங்கள், சித்திரக் குறிப்புக்கள், அது தொடர்பான தொணிப்பொருள்களுடன் இணக்கம் செய்தல் மற்றும் முத்திரை அச்சு தொழில்நுட்ப முறையியல்களைப் பயன்படுத்திக் கொள்வது தொடர்பாக அறிவுரை வழங்கல் மற்றும் அவசியமான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- முத்திரை ஆலோசனைச் சபையில் அங்கத்துவம் வகிப்பதுடன், அப்பணியகத்தின் நடவடிக்கைகள் முறையாக இடம்பெறுவது தொடர்பில் கண்காணிப்புச் செய்தல்.

- தபால் திணைக்களம் அறிவித்த சந்தர்ப்பங்களில் புதிய தபால் சேவைகளை, தபால் திணைக்களத்திற்கு அறிமுகம் செய்யத் தேவையான வழிகாட்டல்களும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டமை.

- தபால் திணைக்களம் கோரிக்கை விடுத்த சந்தர்ப்பங்களில் வெளிநாட்டுத் தபால் சேவைகளை மேம்படுத்தத் தேவையான உதவிகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

- உலக தபால் சங்கம் மற்றும் ஆசிய பசுபிக் தபால் சங்கத்தின் யாப்பு மற்றும் ஏற்பாடுகளுக்கு அமைய இலங்கைத் தபாலினை ஏற்புடையதானதாக்கும் பொருட்டு தபால் திணைக்களத்திற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.

- வெளிநாட்டுப் பயிற்சி அமர்வுகளின் பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற பயிற்சிக்குப் பின்னரான பாடநெறி அறிக்கைகளை ஆராய்ந்து தபாலின் அபிவிருத்திக்குத் தேவையான புதிய பிரேரணைகளை உள்ளடக்கிய 14 அறிக்கைகள் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டமை.

- உலக புகைப்பிடித்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு நடாத்தப்படவிருந்த தேசிய வைபவம் மற்றும் வாகனப் பேரணிக்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுரைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- தபால் ஊழியர்கள் சமர்ப்பிக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

- புதிய வியாபாரத் திட்டமொன்றைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல்.

### ➢ முஸ்லிம் சமய அலுவல்கள்

- 2017 ஆம் ஆண்டில் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகளில் முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்குத் தேவையான அறிவுரைகளை வழங்குவதும், கண்காணிப்புச் செய்வதும்.

- ஹஜ் நடவடிக்கைகளுக்கான சட்டவரைவைத் தயார் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

- வகுப் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய காலத்திற்கு ஏற்ற திருத்தங்கள் பற்றி உரிய தரப்பினர்களை அறிவுறுத்தல் மற்றும் புதிய திருத்தங்களுக்கு வகுப் சபை அங்கத்தவர்களின் பிரேரணைகளைப் பெற்றுத் தருமாறு பணிப்பாளரை அறிவுறுத்தியமை.

- அரபுக் கல்லூரிகளில் ஒரே பாடவிதானத்தின் கீழ் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய மட்டத்திலான பரீட்சையை நடாத்துவதற்குள்ள ஆற்றல் பற்றி ஆராய்வதற்காக மற்றும் அதற்கான கல்விமான்கள் குழுவை நியமனம் செய்யுமாறு பணிப்பாளருக்கு அறிவுரை வழங்கியமை மற்றும் ஆரம்ப கூட்டங்களை நடாத்தியமை மற்றும் தொடர்ந்தும் இது பற்றிய விடயங்களை ஆராய்வதற்கு பணிப்பாளர் (மு.ச. ம. க.அ.) இற்குப் பொறுப்பளித்தல்.

- முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்து உரிய வழிநடாத்தல் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்ளத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டமை.

- முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வழங்கல் செயன்முறையை முறையாக தயார் செய்யத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன், கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- 2017 ரமழான் உற்சவத்தை முன்னிட்டு சவுதி அரேபிய அரசினால் அன்பளிப்பாக இலங்கை அரசுக்கு பேரீத்தம் பழங்கள் 150 மெற்றிக் தொண் கிடைத்ததுடன், இது முஸ்லிம் மக்களுக்கு விநியோகிக்க போதியதாக இருக்காமையினால் அமைச்சரவையின் தீர்மானத்தின் பேரில் கூட்டுறவு மொத்த வர்த்தகக் கூட்டுத்தாபனத்தினால் 150 மெற்றிக் தொண் பேரீத்தம் பழங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொண்டமை மற்றும் இவற்றை முஸ்லிம்களுக்கு முறையாக விநியோகிப்பது தொடர்பாக மேற்பார்வை செய்தமை மற்றும் அவற்றை விநியோகிப்பது பற்றிய அறிக்கைகளை முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொண்டமை.

- பல்வேறு தரப்பினர்களுக்கு மத்திய கிழக்கிலிருந்து அனுப்பப்படுகின்ற பேரீத்தம் பழ இருப்புக்களை, சுங்கத்திலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து மேலதிக ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்ள பங்களிப்புச் செய்தமை மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பூரண கண்காணிப்பின் கீழ் மேற்படி பேரித்தம் பழங்களை முஸ்லிம்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்க ஆலோசனை மற்றும் ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தல் மற்றுமு் அவை விநியோகிக்கப்பட்ட முறையை உள்ளடக்கிய அறிக்கைகளை முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளல்.

- 2018 ஆம் ஆண்டில் பேரீத்தம் பழம் விநியோகிக்கும் செயன்முறையை மென்மேலும் முறைப்படுத்தல் மற்றும் புதிய வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்யும் பொருட்டு திறைசேரியின் அங்கீகாரத்துடன் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அறிவுரைகளையும், கட்டளைகளையும் வெளியிடல்.

- 2017 ஆம் ஆண்டு முதல் வீசா வழங்குவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய முறையியல் அறிமுகம் செய்யப்பட்டதுடன், மேற்படி முறையில் தொடர்பாக வீசா கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கின்ற அனுசரணையாளர்களை (அறபுக் கல்லூரிகள், முஸ்லிம் சமய வழிபாட்டுத்தலங்கள், அமைப்புக்கள்) விழிப்புணர்வூட்டல்

மற்றும் மேற்படி பணிகளை ஏற்புடையவாறு பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

- 2017 ஆம் ஆண்டில் வதிவுக்கான வீசாக்களை நீடிப்பது 405 இனையும், நாட்டினுள் பிரவேசிப்பதற்கான வீசாக்கள் 356 இனையும் வழங்கும் நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்கியமை.

- 2017 ஆம் ஆண்டு தேசிய மீளாதுன் நபி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் ரூ.மி. 14.0 ஒதுக்கப்பட்டுள்து. மேற்படி ஏற்பாடுகளின் மூலம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாட்டங்களைச் சேர்ந்த 29 முஸ்லிம் பள்ளிவாசல்கள், 01 அஹதியா பாடசாலை, 02 மத்ரசாக்கள், 01 தர்ஹா மற்றும் 01 தக்கியா ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கும், யாழ்ப்பாணம் உஸ்மானியா கல்லூரியில் மீலாதுன் நபி விழாவை வெற்றிகரமாக நடாத்தத் தேவையான ஆலோசனைகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டமையும்.

- 2017 ஆம் ஆண்டுக்கு பள்ளிவாசல்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் ரூ.மி. 20.0 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேற்படி ஏற்பாடுகளின் மூலம் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் அறபுக் கல்லூரிகள் புதுப்பிக்கப்படுகின்றன. அதற்கு கௌரவ அமைச்சர் சமர்ப்பித்த பட்டியலை திணைக்களப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல். மேற்படி ஏற்பாடுகளை முறையாக பகிர்ந்தளிக்க அறிவுரை வழங்குவதும், கண்காணிப்புச் செய்வதும்.

- முஸ்லிம் பக்தர்கள், மதகுருமார் மற்றும் முஸ்லிம் அமைப்புக்களின் தலைவர்களினால் கௌரவ சனாதிபதி, பிரதம அமைச்சர் மற்றும் வேறு நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் ஊடாக எம்மிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற கோரிக்கைகள் திணைக்களப் பணிப்பாளருக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய அறிவுரைகளை வழங்கும் பொருட்டு சமர்ப்பித்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல்.

- பள்ளிவாசல்களை நிர்மாணிப்பது தொடர்பாக சமூக அமைப்புக்களினால் முன்வைக்கப்படுகின்ற எதிர்ப்புக்கள் தொடர்பில் பிரதேச நிருவாகம் மற்றும் உரிய பொலிஸ் நிலையங்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளல்.

- பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைகளை நியமனம் செய்யும் போது அநீதிகள் மற்றும் ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பில் பணிப்பாளர் மற்றும் வகுப் சபையுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளல்.

- மகளிர் சமவாயத்தை தயார்செய்யும் போது இஸ்லாம் சமயத்தின் கற்பித்தல்களுடன் ஏற்புடையதாக உள்ளமை மற்றும் சமவாயத்தின் தேவையினைக் கவனத்தில் கொண்டு அதற்குத் தேவையான அவதானிப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.

- மத நல்லிணக்கத்திற்காக குளியாப்பிட்டியில் நடைபெற்ற சர்வமத அறநெறிப் பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தில் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களதின் தலையீட்டைப் பெற்றுக் கொடுத்தமை மற்றும் பங்கேற்கச் செய்தமை.

## 04. உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்

கணக்காய்வுத் திட்டத்திற்கு அமைய தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் 2017 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை பின்வருமாறு.

### 4.1 மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு வினாக்கள் மற்றும் பரிசோதனைகளின் எண்ணிக்கை

(அ) தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு – 09

(ஆ) முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் - 07

### 4.2 மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனைகள்

தபால் திணைக்களம் - 02

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தொடர்கள் நான்கு (04)

### 4.4 ஆரம்ப மதிப்பீட்டு அறிக்கையைத் தயார் செய்தல்.

### 4.5 2017 ஆம் ஆண்டின் நான்கு காலாண்டுகளுக்கான நான்கு (04) அறிக்கைகளைத் தயார் செய்தமை.

## 05. நிதி நடவடிக்கைகள் - தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு

- **மீண்டெழும் நிதி – 2017.01.01 ஆம் திகதி முதல் 2017.12.31 ஆம் திகதி வரையான முன்னேற்றம்**

| செலவுத் தலைப்பு | விபரம் | 2017 ஆம் ஆண்டுக்கான மொத்த ஏற்பாடுகள் (ரூ.மி.) | செலவினம் (ரூ.மி.) |
|---|---|---|---|
| 1001 | சம்பளமும், வேதனமும் | 42.251 | 42.227 |
| 1002 | மேலதிக நேரமும், லீவு நாள் சம்பளமும் | 4.100 | 3.870 |
| 1003 | பிற கொடுப்பனவுகள் | 24.607 | 23.862 |
| 1101 | பிரயாணச் செலவினம் - உள்நாடு | 1.655 | 1.447 |
| 1102 | பிரயாணச் செலவினம் - வெளிநாடு | 3.250 | 2.818 |
| 1201 | எழுதுகருவிகள், அலுவலக தேவைகள் | 3.659 | 3.144 |
| 1202 | எரிபொருள் | 9.235 | 9.220 |
| 1203 | உணவும், குடிபானமும் மற்றும் சீருடை | 0.686 | 0.613 |
| 1301 | வாகனம் | 10.474 | 8.888 |
| 1302 | பொறியும், இயந்திரசாதனமும் | 0.828 | 0.586 |
| 1303 | கட்டிடமும், நிர்மாணிப்பும் | - | - |
| 1401 | போக்குவரத்து | 4.180 | 4.159 |
| 1402 | தபாலும், தொடர்பாடலும் | 3.831 | 3.183 |
| 1403 | மின்சாரமும், நீரும் | 5.181 | 4.351 |
| 1404 | குத்தகை மற்றும் உள்;ராட்சி மன்ற வீத வரி | - | - |
| 1405 | ஏனையன | 7.570 | 7.561 |
| 1506 | அரசாங்க ஊழியர்களுக்கான ஆதனக் கடன் வட்டி | 0.900 | 0.793 |
| | **மொத்தம்** | **122.407** | **116.722** |

- **மூலதன நிதி — 2017.01.01 ஆம் திகதி முதல் 2017.12.31 ஆம் திகதி வரையான முன்னேற்றம்,**

| செலவுத் தலைப்பு | விபரம் | 2017 ஆம் ஆண்டுக்கான மொத்த ஏற்பாடுகள் (ரூ.மி.) | செலவினம் (ரூ.மி.) |
|---|---|---|---|
| 2001 | கட்டிடம் | 3.160 | 3.144 |
| 2002 | பொறியும், இயந்திரசாதனமும் | 0.350 | 0.118 |
| 2003 | வாகனம் | 6.077 | 5.890 |
| 2101 | வாகனம் | 85.655 | 84.055 |
| 2102 | தளபாடமும், அலுவலக உபகரணமும் | 0.942 | 0.929 |
| 2103 | பொறியும், இயந்திரசாதனமும் | 23.778 | 23.660 |
| 2104 | கட்டிடமும், நிர்மாணிப்பும் - அமைச்சுக் கட்டிடம் | 0.150 | - |
| 2-2-2104 | கட்டிடமும், நிர்மாணிப்பும் - முஸ்லிம் திணைக்களக் கட்டிடம் | 43.000 | 31.549 |
| 2401 | பயிற்சி மற்றும் ஆற்றல் விருத்தி | 2.053 | 2.053 |
| 2509 | வேறு முதலீடுகள் - முத்திரை மற்றும் தபால் சேவைகளை மேம்படுத்தல் | 1.000 | 0.999 |
| 2502-2 | யாழ் மாவட்டம் - தபால் வலையமைப்பை மேம்படுத்தல் | 10.000 | 7.791 |
| | **மொத்தம்** | **176.165** | **160.188** |

Annexure 01

# Organizational Structure – Ministry of Posts, Postal Services and Muslim Religious Affairs



Annexure 02

## Ministry of Posts, Postal Services and Muslim Religious Affairs

### Details of the staff as at 31.12.2017

| Post | Service | Grade | Salary code | Service category | Cadre approved by the Department of Management Service | | | Current situation | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Permanent | Contract | Casual | Permanent | Contract | Casual | Other |
| Secretary | | | SL-4/2016 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| Assistant Secretary | SLAS | Special | SL-3/2016 | 1 | 2 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 |
| Additional Secretary (As personal) | UPS | 1 | SL-3/2016 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| Chief Financial Officer | SLAcS | Special | SL-3/2016 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| Chief Accountant | SLAcS | 1 | SL-1/2016 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| Chief Internal Auditor | SLAcS | 1 | SL-1/2016 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| Senior Assistant Secretary | SLAS | 1 | SL-1/2016 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| Director | SLPS | 1 | SL-1/2016 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| Deputy Director /Assistant Director | SLPS | 11/111 | SL-1/2016 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| Accountant | SLAcS | 11/111 | SL-1/2016 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| Assistant Secretary | SLAS | 11/111 | SL-1/2016 | 1 | 3 | 0 | 0 | 3 | 0 | 0 | 0 |
| Legal Officer | Dept. | 111 | SL-1/2016 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| Administrative Officer | PMAS | Supra | MN-7/2016 | 2 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| ICT Officer | SLICTS | 11 | MN-6/2016 | 2 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| Translator | TS | 1 | MN-6/2016 | 2 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| Coordinating Secretary of the Secretary | Temporary | | Rs.36,620/- (Monthly allowance) | 3 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 | 0 |
| ICT Assistant | SLICTS | 111 | MT-1/2016 | 3 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| Development Officer | DOS | 111 | MN-4/2016 | 3 | 10 | 0 | 0 | 6 | 0 | 0 | 0 |
| Budget Assistant | Asso. Officer | | MN-4/2016 | 3 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| Development Assistant | Asso. Officer | | MN-4/2016 | 3 | 19 | 0 | 0 | 15 | 0 | 0 | 0 |
| Supplies Assistant | Asso. Officer | | MN-4/2016 | 3 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| Audit Assistant | Asso. Officer | | MN-4/2016 | 3 | 5 | 0 | 0 | 3 | 0 | 0 | 0 |
| Transport Officer | SLTS | | MN-3/2016 | 3 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| Public Management Assistant | PMAS | 1/11/111 | MN-2/2016 | 3 | 22 | 0 | 0 | 21 | 0 | 0 | 0 |
| Driver | DS | 1/11 | PL-3/2016 | 4 | 13 | 0 | 0 | 08 | 0 | 0 | 0 |
| Officers Workers' Service | OES | 1/11/111 | PL-1/2016 | 4 | 17 | 0 | 0 | 15 | 0 | 0 | 2 |
| Still Photographer | Temporary | | Rs. 14,425/- (Monthly allowance) | 4 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 |
| Camera Operator | Temporary | | Rs. 14,425/- (Monthly allowance) | 4 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 | 0 |
| Camera Operator Assistant | Temporary | | Rs. 11,730/- (Monthly allowance) | 4 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 | 0 |
| Garden Labourer | **Contract** | 111 | PL-1/2016 | 4 | 0 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 |
| **Total** | | | | | **110** | **01** | **04** | **84** | **01** | **03** | **02** |

# Ministry in Action






His Excellency the President handed over Mail vans to the Department of Posts during the 2017 World Postal Day Ceremony held atPolonnaruwa on 09th October 2017

His Excellency the President, Hon. Speaker KaruJayasuriya, Hon. Ministerand Post Master General participating for stamp issue on Vesak.





His Excellency the President laying foundation stones to the Pollonnaruwa Postal Complex

Inaugural Ceremony of water bill collection through Postal Network on 01.06.2017






Distributing of mail bicycles to the Postmen by Hon. Minister at Polonnaruwa and Kandy

# Ministry in Action





Promoted Grade III Postal Service Officers and Post/Sub Post Masters receiving certificates





Participating in the Meelad Ceremony in Jaffna

New Philatelic Branch opening at Anuradhapura






Distributing dates for Ramazan 2017

Ministry obtained the award for certificate of recognitionin the Evaluation Programme of the Committee onPublic Accounts